Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 470 / 2018

**DEPOSITION OF ACCUSED SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | காளிராஜ் | Calling: | கிளை மேலாளர் |
| Father's Name: | தங்கவேல் | Religion: | |
| Village: | எட்டையபுரம் | Age: | 33 |
| Taluk: | தூத்துக்குடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 05.08.2026. நேரம்: 12.21 PM

(எதிரி ஆஜர்)

எ.த.சா.1 முதன்மை விசாரணை.

நான் தற்போது குடியாத்தம் யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் ஒரு வருடமாக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அந்த அழைப்பானையில் வங்கி கணக்கு எண். 24241110000 2421 என்ற ஆந்திரா வங்கியின் உடைய விவரங்கள் குறித்து சாட்சியம் அளிக்கும் படி இருந்தது. அழைப்பானையில் குறிப்பிட்டுள்ள வங்கிகணக்குடன் இந்த வழக்கின் காசோலை ஒத்துபோகிறது. ஆனால் வங்கியின் கணக்கானது தாஸ் ஏஜென்சி என்றும் அதன் உரிமையாளர் பிரிபு என்றும் உள்ளது. அதற்கான கணினி பதிவிறக்கம் செய்யப்பட்டதை எடுத்துவந்துள்ளேன். **அந்த கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகலானது எ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கின் காசோலை எண்ணானது 256520. இந்த காசோலையானது மோனிகா பிரியதர்ஷினிக்கு கொடுக்கப்பட்டதா என்பதை குறித்து எனக்கு தெரியாது. அது வங்கி கணக்கின் உரிமையாளருக்கும் அவருக்கும் தான் தெரியும். இந்த வழக்கின் காசோலை பணம் இல்லை என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது. இந்த காசோலையில் உள்ள

கையொப்பம் வங்கி கணக்கு வைத்திருப்பவரின் கையொப்பம் கிடையாது. தற்போது என்னிடம் காட்டப்படும் எ.த.சா.ஆ 1 ல் உள்ள செக் லீப் நம்பர்ஸ் 256501 மற்றும் 256550 என்பது தாஸ் ஏஜென்சி உடையது தான். இந்த செக் லீப் நம்பர்ஸ்க்கு இடைப்படட எண்ணா 256520 என்பது தான் இந்த வழக்கின் காசோலை.

புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் காசோலை சம்மந்தமான விவரங்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியுமா என்றால் வங்கியில் என்ன விவரங்கள் உள்ளதோ அந்த விவரங்கள்தான் எனக்கும் தெரியும். காசோலை திருப்பப்பட்டதற்கான காரணம் என்னவென்றால் போதியபணம் இல்லை என திருப்பப்பட்டுள்ளது. இந்த வழக்கின் ரிட்டன் மெமோவிலும் அந்த காரணம் தான் உள்ளது என்றால் சரிதான். காசோலைக்கான உரிமையாளர் யார் என என்னால் கூறமுடியுமா என்றால் வங்கி விவரம் படி தாஸ் ஏஜென்சி என்கிற கரன்ட் அகொன்ட். அதன் உரிமையாளர் திரு. பிரபு. வங்கி விதிப்படி காசோலையில் யார் கையொப்பம் இடவேண்டும் என்றால் அதன் உரிமையாளர் தான் இடவேண்டும். தாஸ் ஏஜென்சிக்கு பங்குதாரர், உரிமையாளர் என வேறு யாரேனும் உள்ளார்களா என்றால் இல்லை. இந்த வங்கி கணக்கானது கூட்டு வங்கி கணக்கா என்றால் இல்லை. தனிநபர் வங்கி கணக்கு தான். இந்த வழக்கின் காசோலையில் உள்ள கையொப்பம் உரிமையாளரது இல்லை என்றால் சரிதான். காசோலையில் கையொப்பம் மாறி இருந்தால் வங்கி முறைப்படி அந்த காரணத்தைதான் முதலில் சொல்லுவோம் என்றால் இல்லை, முதலில் போதியபணம் உள்ளதா என பார்ப்போம். அதன் பிறகு தான் கையொப்பம் மாறுப்பட்டு இருந்தால் சொல்வோம். கையொப்பம் மாறுப்பட்டு இருப்பதை குறித்து நாங்கள் கூறினோமா என்றால் ரிட்டன் மெமோவில் நாங்கள் குறிப்பிடவில்லை. காசோலையில் உள்ள கையொப்பம் யாருடையது என என்னால் கூற முடியாது என்றால் சரிதான். ஏஜென்சி கணக்கிற்கு யார் யார் கையொப்பம் போட அதிகாரம் உள்ளது என்ற பெசிமன் சிக்னேசர் படிவம் எங்கள் வங்கியில் உள்ளதா என்றால் ஆமாம். வங்கி கணக்கு தொடங்கும் போது போடப்படும் கையொப்ப நகலை தான் நாங்கள் இணைத்திருப்போம். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் நீதிமன்றத்தின் மூலம் கோரப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அந்த காசோலை

பணபரிவர்த்தனைக்காக வங்கியில் செலுத்திய போது போதிய பணம் இருந்திருந்தால் கையொப்பம் மாறுப்பட்டு இருந்தால் கூட நாங்கள் பணத்தை கொடுத்திருப்போமா என்றால் இல்லை. ரிட்டன் மெமோவில் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டு இருக்கும் போது நான் தற்போது நீதிமன்றத்தில் கையொப்பம் மாறுபட்டு இருப்பதாக புதிய சங்கதிகளை கூறுவது வங்கி பதிவேட்டிற்கு முரணானது என்றால் இல்லை. காசோலை திருப்பபட்ட பிறகு அதன் உரிமையாளருக்கு அது சம்மந்தமாக தகவல் தெரிவிப்பது வழக்கமா என்றால் வழக்கம் இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) காளிராஜ்

SRIPATHI K

SRIPATHI K
2026.08.10
09:16:25
+0530